ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1553/31 - 2008 ජුනි 13 වැනි සිකුරාදා - 2008.06.13

*1553/31 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78.*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் வடறெகெ ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது 2007, ஒற்றோபர் 18 ஆந் திகதிய 1519/26 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாக திருத்தப்பட்டவாறான 1995, நவெம்பர் 7 ஆந் திகதிய 896/ 2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம் தொடர்பில் சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையில் அத்தகைய அட்டவணையின் நிரல் I இல் காணப்படும் "முகாமைத்துறைக் கற்கைகள் பீடம்" என்னும் விடயத்தினையும், அதற்கான நிரல் II இல் காணப்படும் நேரொத்த பதிவுகளையும் நீக்கம் செய்து அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் அக்கட்டளையை திருத்துகின்றேன் :-

| "நிரல் I | நிரல் II |
|---|---|
| பீடம் | துறைகள் |
| முகாமைத்துறைக் கற்கைகள் பீடம் | 1. வணிக முகாமைத்துறை<br>2. கணக்கியல் மற்றும் நிதித்துறை<br>3. சுற்றுலா முகாமைத்துறை<br>4. சந்தைப்படுத்தல் முகாமைத்துறை". |

பேராசிரியர் வடறெகெ ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2008, யூன் 09.

06-601

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.